**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 06.11.2025**
**OS. No. 186/2021**
**வழக்கு சாட்சி DW.1–சாந்தி , க/பெ. சண்முக சுந்தரம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பரிகாரம் எனக்கு தெரியவில்லை. யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் மீதும், என் பிள்ளைகளான முரளி மற்றும் விமலா ஆகியோர் மீதும் தாக்கல் செய்துள்ளார். எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் நினைவில்லை. எனக்கு திருமணம் ஆனதிலிருந்து நான் எங்கு குடியுள்ளேன் என்றால் ஜலகண்டாபுரத்தில் குடியுள்ளேன். நான் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக அங்கு தான் குடியுள்ளேன், நான் தற்போது கோயம்புத்தூரில் என் மகள் விமலா வீட்டில் உள்ளேன். அவ்வப்போது ஜலகண்டாபுரத்திற்கு வந்து செல்வேன். நாங்கள் பெங்களூரில் சுமார் 2, 3 வருடங்கள் குடியிருந்தோம், என் கணவருக்கு உடல்நிலை சரியில்லாததால் இங்கு வந்துவிட்டோம். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது நாங்கள் பெங்களூரில் இருந்ததாகத்தான் பிராதில் முகவரி குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த சமயத்தில் அங்கு தான் இருந்தோம்.

2) நான் கோயம்புத்தூரில் தான் தற்போது உள்ளேன் என்பதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து ஜலகண்டாபுரத்தில 7 வது வார்டில் உள்ளது, அதன் சர்வே எண் எனக்கு நினைவில்லை. அதன் கதவு எண், மின் இணைப்பு எண் ஆகியவை தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை. நாங்கள் விசைதறி நடத்தி வந்ததற்கான உரிமம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த உரிமம் வாதியிடம் தான் உள்ளது. அந்த உரிமம் என் கணவர் பெயரில் இருந்தது. அதை எங்கள் வீடு புகுந்து பிரோவை உடைத்து வாதி எடுத்து கொண்டார். நான் சொல்வதுபோல் என் கணவர் பெயரில் எந்த உரிமமும் இல்லை என்றும், வாதி பெயரிலுள்ள உரிமத்தை

அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது சரியல்ல. அவர் பொய்யாக தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தை 2000 ல் என் கணவர் யாரிடமிருந்து கிரையம் பெற்றதாக நான் சொல்கிறேன் என்றால் தாரமங்கலத்திலுள்ள பெருமாள் என்பவரிடமிருந்து பெற்றார். அந்த கிரையமானது என் கணவர் சண்முகம் பெயரிலும், வாதி கேசவராஜ் பெயரிலும் என் கணவர் பெற்றார்.

3) வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்றால் சிமெண்ட் அட்டை போட்ட வீடு உள்ளது. அந்த சிமெண்ட் அட்டை போட்ட வீடு தான் எங்களது வீடு என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான், நாங்கள் கிரையம் பெற்றபிறகு அந்த வீட்டை இடித்துவிட்டு, இரண்டு அடுக்கு மாடி வீடாக கட்டிவிட்டோம். அதன் கீழ் தளத்தில் மூன்று அறைகள் உள்ளது, முதல் தளத்தில் ஒரு அறை உள்ளது. நாங்கள் விசைத்தறி தொழில் எந்த தளத்தில் செய்து வந்தோம் என்றால் கீழ் தளத்தில் ஒரு அறையில் செய்து வந்தோம். கீழ் தளத்தில் மூன்று அறைகள் என்று நான் எதை குறிப்பிடுகிறேன் என்றால் படுக்கை அறை, சமையல் அறை மற்றும் Hall ஒன்று ஆகும்.

4) மேல்தளத்தில் ஒரு அறை தான் உள்ளது, நான் சொல்வது தவறு என்றும் கீழ் தளத்திலுள்ளவாறு மேல் தளத்திலும் படுக்கை அறை, சமையல் அறை மற்றும் Hall ஒன்று உள்ளது என்றால் சரியல்ல. பங்கஜவள்ளி என் கணவரின் சகோதரி ஆவார், அவர் தின்னம்பட்டியில் குடியுள்ளார். என் கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்றல் தின்னம்பட்டியில் தான் தங்கி சிகிச்சை பார்த்து கொள்வார் என்றால் சரியல்ல. என் கணவர் ஜலகண்டாபுரத்திலுள்ள வழக்கு சொத்தில் தான் இறந்தார். நான் சொல்வது தவறு என்றும் என் கணவர் கோயம்புத்தூர் குப்புசாமி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தான் இறந்தார் என்றால் சரியல்ல.

5) என் நிரூபண வாக்குமூலத்தில் வீட்டு வரி, குடிநீர் வரி எவ்வளவு கட்டியுள்ளேன் என்று குறிப்பிடவில்லை என்றால் ரூ.1,500/ கட்டியுள்ளேன். வரிகள் அனைத்தும் என் பெயரில் இல்லாததால் தான் நான் அதற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் பெயரிலுள்ளதாக

சொல்லப்படும் கூட்டுப்பட்டாவின் எண் தெரியுமா என்றால் எனக்கு நினைவில்லை. மின் கட்டணம் எவ்வளவு செலுத்துவோம்எ ன்றால் ரூ.1000/க்கும் மேல் செலுத்துவோம். அதற்குண்டான ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) 1999ல் என் கணவரும், வாதியும் சேர்ந்து ஒரு நிலத்தை கிரையம் பெற்றனர் என்றால் சரிதான், அந்த நிலம் குப்பம்பட்டி ரோட்டில் அமைந்துள்ளது. அது கிரையம் பெற்ற தேதி, மாதம் தெரியுமா என்றால் நினைவில்லை. அந்த நிலம் விவசாய நிலமாகும், அதன் பரப்பு 3300சதுரடி ஆகும். நான் சொல்வது தவறு என்றும், அது வீட்டு மனையாக வாங்கப்பட்ட நிலம் என்றால் சரியல்ல. 2012ம் வருடத்தில் என் கணவரும், வாதியும் எழுதி கொண்ட பாகபிரிவினை பத்திரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் தாரமங்கலத்தை சேர்ந்து ராமலிங்கம் மற்றும் மற்றொருவர் கையொப்பம் செய்தார், அவரது பெயர் எனக்கு நினைவில்லை.

7) எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும், ஆனால் தற்போது கண் சரியாக தெரியாததால் படிக்க இயலவில்லை. நான் சொல்வது போல் ராமலிங்கம் என்பவர் மேற்கண்ட ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றும், கந்தசாமி மற்றும் முருகன் தான் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரியல்ல. ராமலிங்கம் தான் அந்த பத்திரத்தையே தயாரித்தார். குப்பம்பட்டி ரோட்டில் வாங்கப்பட்ட சொத்தின் மதிப்பு தெரியுமா என்றால் ரூ.3,25,000/–ஆகும். பாகபிரிவினை ஆவணத்தில் வாதி எவ்வளவு பணம் பெற்றுக்கொண்டு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் ரூ.4,25,000/– பெற்றுக்கொண்டு எழுதி கொடுத்தார். என் கணவர் என்ன வேலை செய்தார் என்றால் விசைத்தறி தொழில் செய்து வந்தார்.

8) பெங்களூரில் நாங்கள் இருந்தபோது என் கணவர் வேலைக்கு செல்லவில்லை, நான் தான் வாழை இலை அறுத்து விற்கும் தொழில் சொந்தமாக செய்து வந்தேன். அதன் மூலம் மாதம் ரூ.20,000 லிருந்து ரூ.50,000 வரை வரும். நான் அவ்வளவு சம்பாதிக்கவில்லை என்றும், மாதம் ரூ.8000/-ம் தான் சம்பாதித்தேன் என்றால் சரியல்ல. வாதிக்கு நாங்கள் எவ்வாறு ரூ.4,25,000/-கொடுத்தோம் என்றால் வேறு ஒருவரிடமிருந்து கடன் பெற்று தொகையாகத்தான் கொடுத்தோம். 2012 ல் என் கணவருக்கு கேன்சர் நோய் வந்தது. எந்த மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தோம் என்றால் வேலூர் CMC மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தோம். நான் வைத்திருந்த பணம் அனைத்தும் என்கணவரின் மருத்துவ செலவிற்கே சரியாகிவிட்டது என்றும், நாங்கள் சொல்வதுபோல் வாதிக்கு எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகள் 2009 லிருந்து 2012 வரை கல்லூரியில் படித்து கொண்டிருந்தார்.

9) என் மகன் அந்த சமயத்தில் என்ன வேலை செய்து வந்தார் என்றால் அவர் 12 ம் வகுப்பு படித்து வந்தார். என் மகன் 12 ம் வகுப்பு வரை தான் படித்துள்ளாரா என்றால் ஆமாம். என் மகனுக்கு மேல் படிப்பு படிக்க வைக்கவே எங்களிடம் பணம் இல்லாததால் தான் 12 ம் வகுப்புடன் நிறுத்திவிட்டோம் என்றால் சரியல்ல. எந்த வருடம் எந்த தேதி, எந்த மாதம் வாதி புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியவில்லை, நாங்கள் காவல் நிலையத்திற்கும் செல்லவில்லை. எங்களுக்குள் உள்ள பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து ஏதேனும் நடந்ததா என்றால் என் கணவர் இறப்பதற்கு முன்பு ஒரு முறையும், இறந்தபிறகு ஒரு முறையும் நடந்தது. நாங்கள் வாதியின் பொருட்களை வீட்டிலிருந்து எடுத்து வெளியே வீசியதால் தான் வாதி புகார் அளித்தார் என்றால் சரியல்ல.

10) எங்கு வைத்து பஞ்சாயத்து நடந்தது என்றால் வழக்கு சொத்து உள்ள வீட்டில் தான் பஞ்சாயத்து நடந்தது. வழக்கு சொத்தானது என் கணவர் மற்றும் வாதி இருவரும் சேர்ந்து கிரையம் பெற்ற சொத்து என்பதால் வாதிக்கும் அதில் உரிமையுள்ளது என்றும், வாதி ரூ.4,25,000/-எந்த காலத்திலும் வாங்கவில்லை என்றும், அதற்கு பதிலாகத்தான்

வழக்கு சொத்தில் அமைந்துள்ள வீட்டை அவருக்கு கொடுத்தோம் என்றும், அதனால் வாதிக்கு தான் வழக்கு சொத்து முழுவதும் உரிமையுள்ளது என்றும், அதனால் வாதிக்கு ஆதரவாக இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.